# *DEPOSITION OF WITNESS*
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## CC No.524/2024

## PW: 1

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.மகேஷ் | Taluk : | உடையார்பாளையம் |
| Father's Name : | திரு.சுந்தரேசன் | Calling : | LW1 |
| Village : | கோடாலிகருப்பூர் | Age : | 40 |

Solemnly affirmed by Thiru.X.Gilbert Maria Julian, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 06th day of November 2025.

Signature of Witness.

(Accused present. Additional Public Prosecutor Present. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் தற்போது கோடாலிகருப்பூரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். 26.07.2024 அன்று மாலை சுமார் 5.00 மணியளவில் டாக்டர் மூர்த்திரோட்டில் சிவகுருநாதன் தெருவில் செல்போன் சரி செய்வதற்காக நானும் எனது அண்ணன் சங்கரும் எக்சல் 100 இருச்சக்கர வாகனத்தில் மீன் மார்க்கெட் அருகில் சென்றுக் கொண்டிருந்தோம். அங்கே செல்போனை சரிசெய்து விட்டு பாலக்கரை வழியாக வந்துக் கொண்டிருந்தோம். அப்போது காவல் துறையினர் வாகன தணிக்கையில் ஈடுப்பட்டுக் கொண்டிருந்தார்கள். சங்கரிடம் காப்பீடு இல்லாததால் காவல் துறையினரை தவிர்ப்பதற்காக மூர்த்தி ரோடு வழியாக சிவகுருநாதன் தெருவிற்கு வந்துக் கொண்டிருந்தபோது TN46 D7599 என்ற

அசோக் லைலேண்ட் லாரியை மிக அதிவேகமாக ரோட்டிற்கு நடுவே போட்டிருந்த வெள்ளை கோட்டினை தாண்டி அஜாக்கிரதையாகவும், ஆரன் அடிக்காமலும் வந்தது. நாங்கள் ரோட்டின் இடது புறமாக சென்றுக் கொண்டிருந்தோம். வேகமாக வந்த லாரி என்னை இடித்து தள்ளியது நான் கீழே விழுந்து விட்டேன்.

2) இருச்சக்கர வாகனத்தையும் சங்கரையும் லாரி வேகமாக இழுத்து சென்றது. சுமார் 30 மீட்டர் தூரத்திற்கு இழுத்து சென்றது. எனக்கு தலையில் முன்புறம் அடிப்பட்டது. வலது கையில் காயம் ஏற்பட்டது. சங்கருக்கு காதிலும் வாயிலும் இரத்தம் கொட்டியது. உடனே அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் கூடினார்கள். 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொன்னார்கள். உடனே கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு இருவரையும் அழைத்து சென்றார்கள். அங்கு வைத்து சங்கர் மாலை சுமார் 6.30 மணியளவில் இறந்து போனார். அந்த தகவலை காவல் துறையினர் விசாரித்தார்கள். அது சம்மந்தமாக புகார் வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படுவது தான் நான் அளித்த புகார் வாக்குமூலம் ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

3) டாக்டர் மூர்த்தி ரோடு, சிவகுருநாதன் தெரு சாலை என்பது மிகவும் குறுகிய சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு அருகாமையில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். எந்தவொரு வாகனமும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி

வரும்போது வேகத்தடையை தாண்டித்தான் வரவேண்டும் என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் எனது வாகனத்திற்கு முன்னால் எதிரி ஓட்டியதாக வாகனத்திற்கு முன்னால் 3 கனரக வாகனங்கள் நின்றுக் கொண்டிருந்தது என்றால் சரியல்ல. விபத்து நடப்பதற்கு முன்பு போலீசார் நாங்கள் ஓட்டிய வாகனத்தை துரத்தி கொண்டு வந்தார்களா என்றால் இல்லை. கும்பகோணம் அரசு மருத்துவமனையில் எவ்வாறு காயம் ஏற்பட்டது என்ற விவரத்தை நான் சொன்னேன். அப்போது காயம்பட்ட நபர் மது போதையில் இல்லை. அவருக்கு அந்த பழக்கம் இல்லை. எனக்கு வாகனம் ஓட்டுவதற்காக ஓட்டுநர் உரிமம் உள்ளது. சங்கருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது. டிவிஎஸ் எக்சல் இருச்சக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் சங்கர் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எங்கள் இருவரையும் தவிர வேறு யாரும் அங்கு இல்லை என்றால் சரிதான். செபஸ்டின், அஜீத் ஆகியோருக்கு 5 நிமிடங்களில் தகவல் சொன்னேன். இறந்து போன சங்கர் சுமார் 10 வருடங்களாக வெளிநாட்டில் இருந்தார். விபத்து நடந்த இடத்திற்கு அருகாமையில் தான் காவலர் குடியிருப்பு உள்ளது என்றால் சரிதான்.

4) சங்கர் வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்தால் மட்டும் தான் இந்த வாகனத்தை ஓட்டுவார் என்றால் சரிதான். மற்ற நேரங்களில் மேற்படிய வாகனம் வீட்டில் தான் இருக்கும். சம்பவ இடத்தில் 100 மீட்டர் தொலைவில் ஒரு கனரக வாகனம் வருவதை எங்களால் பார்க்க முடியும் என்றால் சரிதான். எவ்வளவு வேகத்தில் அந்த வாகனம் வந்தது என்று என்னால் குறிப்பிட்டு கூற முடியாது.

விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் மேற்கு பக்கமாக ஒரு பிரிவு சாலை பானாதுரை சந்திற்கு செல்கிறது என்றால் சரிதான். கிழக்கு பக்கமாக ஒரு பிரிவு சாலை டாக்டர் மூர்த்தி ரோட்டிற்கு செல்கிறது என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எத்தனை முறை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள், பின்னிட்டு ஒரு வாரம் கழித்து காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். விபத்து நடந்த உடனேயே எனக்கு மயக்கம் ஏற்பட்டது என்றால் சரிதான். சங்கர் எனக்கு அண்ணன் உறவு முறை ஆகும். வழக்கு சம்மந்தமான புகாரை நான் தான் எழுதினேன். சங்கர் விபத்து நடந்தபோது சுய நினைவுடன் தான் இருந்தார் என்றால் சுய நினைவில் இல்லை. வடக்கு தெற்கு சாலையில் தான் விபத்து நடந்தது. நான் சொல்வது போல் நான் சொன்ன நாள் நேரத்தில் மேற்படி விபத்து சம்பவமே நடைபெறவில்லை என்றாலும், நான் சொல்லும் அசோக் லைலேண்ட் லாரியால் இந்த விபத்து நடைபெறவில்லை என்றாலும், அன்றைய தினம் நானும் சங்கரும் மது போதையில் மேற்படி வாகனத்தை ஓட்டி விபத்து ஏற்படுத்தினோம் என்றாலும், குறுகலான சாலையில் பழுதடைந்த இருச்சக்கர வாகனத்தை ஓட்டி இந்த விபத்தை ஏற்படுத்தினார் என்றாலும் சரியல்ல.

5) நான் இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இறந்து போன சங்கருக்கு இழப்பீடு கேட்டு அவரது வாரிசுதாரர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக நீதிமன்றத்தில் பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நின்று கொண்டிருந்த லாரியின் மீது இருச்சக்கர வாகனத்தை மோதி விபத்தை ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. இந்த விபத்து யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்பதை ஜம்ஜம் சூப்பர் மார்க்கெட் சிசிடிவி கேமராரை போலீசார் பார்த்தார்கள் என்றால் பார்த்ததாக சொன்னார்கள்.

மறு விசாரணை : இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
Thanjavur at Kumbakonam.